அ.வ.எண் : 205/2016

தேதி : 19-11-2020

பெயர் : சொர்னலிங்கம்

நேரம் : முற்பகல் 11.15 முதல் 11.40 வரை.

**வா..சா. 1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

கல்யாண சுந்தர ஆச்சாரிக்கு 3 ஆண் வாரிசுகள் அவர்கள் அனைவரும் உயிருடன் உள்ளார்கள். ஏகாம்பர ஆச்சாரி என்பவர் என்னுடைய பங்காளி உறவு ஆக வேண்டும். அவருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 2 வாரிசுகள் உள்ளார்கள். சார்வு நீதிமன்றம் காஞ்சிபுரம் அசல் வழக்கு எண் 744/80 ல் அறங்காவலராக 1 ஏகாம்பர ஆச்சாரி, 2 திருநாவுக்கரசு ஆச்சாரி ஆகியோர்கள் அறங்காவலர்களாக அந்த வழக்கில் பிரதிவாதிகளாக இருந்து வழக்கு நடத்தி வந்துள்ளார்கள் என்றால் சரிதான். இவ்வழக்கில் திருநாவுக்கரசு ஆச்சாரியின் வாரிசுகளாக நாங்கள் மட்டுமே வழக்கு தொடர்ந்து வந்துள்ளோம் என்றால் சரிதான். ஆனால் கோயில் நிர்வாகத்தை நாங்கள் மட்டுமே நிர்வாகித்து வருவதால் நாங்கள் வழக்கு தொடர்ந்தோம். இவ்வழக்கில் 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகளின் தந்தையார் பெயர் வரதப்ப ஆச்சாரி என்றால் சரிதான். பிரதிவாதிகளின் தந்தையான வரதப்ப ஆச்சாரி என்பவர் கல்யாண சுந்தர ஆச்சாரி, ஏகாம்பர ஆச்சாரி, திருநாவுக்கரசு ஆச்சாரி ஆகிய எங்களுக்கும் எந்த ஒரு உறவு முறையும் கிடையாது என்றால் சரிதான். கல்யாண சுந்தர ஆச்சாரி, ஏகாம்பர ஆச்சாரி, திருநாவுக்கரசு ஆச்சாரி ஆகிய மூவரும்தான் ஆதியில் அவர்கள்தான் கோயில் அறங்காவலர்களாக இருந்தார்களா என்றால் இல்லை. திருநாவுக்கரசு ஆச்சாரி மட்டும்தான் அறங்காவலராக இருந்து வந்தார். மற்ற இருவரும் அறங்காவலர்களாக இருந்தது இல்லை. இவ்வழக்கில் 4ம் பிரதிவாதி பியாரிஜான் என்பவர் ஒரு மும்தாஜ் என்பவரிடமிருந்து தாவா சொத்தின் மேற்கூரையை மட்டும் விலைக்கு பெற்றார். மேற்படி நபர்களுக்கிடைய ஏற்படுத்திக்கொண்ட கிரைய பத்திரம் பதியப்பட்டிருந்ததா என்ற விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி பத்திரம் குறித்து நீதிமன்றத்தில் நீதிமன்றத்தில் நான் இவ்வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு தெரிந்து கொண்டேன். இவ்வழக்கின் 4ம் பிரதிவாதி தாவா சொத்தினை கிரையம் பெற்ற பிறகு கட்டிடம் கட்டிய விவரம் நான் தெரிந்து கொண்டேன். தாவா சொத்தின் மேற்கூரையை கிரையம் பெற்ற பிறகு 4ம் பிரதிவாதி அடிமனையில் எத்தனை

ஆண்டுகள் கழித்து வீடு கட்டினார் என்றால் சுமார் 2 ஆண்டுகள் கழித்து வீடு கட்டினார். தாவா சொத்தில் 4ம் பிரதிவாதியால் கட்டப்பட்ட கட்டிடம் சுமார் 14 ஆண்டுகளாக இருந்து வருகிறது என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி கட்டிடம் கட்டிய பிறகு இந்த வழக்கினை தவிர மற்ற வகையில் 4ம் பிரதிவாதியை குறித்து நடவடிக்கை மேற்கொண்டோமா என்றால் வழக்கு எதுவுமே பதிவு செய்யவில்லை. ஆனால் வாய்மொழியாக மட்டுமே ஆட்சேபனை தெரிவித்து வந்தோம். நாங்கள் இவ்வழக்கு கோயிலில் அறங்காவலராக எப்போதும் இருந்தது இல்லை. பொய்யாக அறங்காவலராக இருந்தோம் என்று வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. இந்த தாவா சொத்து குறித்து ஏற்கனவே இவ்வழக்கின் 4ம் பிரதிவாதி பியாரிஜான் என்பவர் காஞ்சிபுரம் உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண் 870/1996 என்ற வழக்கினை தேவகி வகையறாக்கள் மீது தொடர்ந்து அவருக்கு ஆதரவாக தீர்ப்பினை பெற்றுள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து குறித்து பொய்யான விவரங்கள் சொல்லி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கில் கோரும் பரிகாரங்கள் நான் பெறுவதற்கு எந்த வகையிலும் உரிமையானவன் இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் 4ம்பிரதிவாதி கிரையம் பெற்ற காலத்தில் நான் சென்னையில் குடியிருந்து வந்தேன். தாவா சொத்தில் உள்ள கூரைகள் எரிந்துவிட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் சென்னையில் இருந்து தாவா சொத்தின் அருகே வாரம் ஒரு முறை வந்து போவது எனக்கு வழக்கம். இந்த வழக்கில் எந்த ஒரு முகாந்திரமும் இல்லாமல் பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்துள்ளதால் பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் இவ்வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.